**கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது)**
**அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.எம்.எஸ்.தண்டாயுதபாணி.,**

ந.க.அ3 / 3152 / 2022 நாள். 01 .03.2023

பொருள் : பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கரூர் மாவட்ட வருவாய் அலகு – 2022–ம் ஆண்டு இளநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியல் வெளியிடப்பட்டது – இளநிலை வருவாய் ஆய்வாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டு பணியில் சேர்ந்த திரு.செ.சின்னதுரை மற்றும் திரு.பா.அருண்பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை :
1. கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் அறிவிக்கை ந.க.அ3/3152/2022, நாள். 08.08.2022.
2. கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/3152/2022, நாள்.11.08.2022.

*********

**ஆணை :**

கரூர் மாவட்ட வருவாய் அலகில் 2022–ம் ஆண்டிற்கான இளநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியலில் இடம் பெற்று பார்வை 1–ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவி உயர்வு அளித்து, பார்வை 2–ல் காணும் செயல்முறைகளின்படி பணியிடம் வழங்கி பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் நபர்களுக்கு அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் கலம் 4–ல் கண்டவாறு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் தற்பொழுது பணிபுரியும் அலுவலகம் | இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு.செ.சின்னதுரை,<br>தனி வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம், கரூர். | 11.08.2022<br>முற்பகல் | 11.08.2022<br>முற்பகல் |
| 2. | திரு.பா.அருண்பாலகிருஷ்ணன்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>(தேர்தல் பிரிவு)<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர். | 11.08.2022<br>முற்பகல் | 11.08.2022<br>முற்பகல் |

இச்செயல்முறை ஆணை தொடர்பாக மேற்காணும் நபர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் ஏற்படுத்தும்படி சம்பந்தப்பட்ட தலைமை அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவரின்
நேர்முக உதவியாளர்(பொது),
கரூர்.

பெறுநர்

1. திரு.செ.சின்னதுரை,
தனிவருவாய் ஆய்வாளர்,
மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர்
பாதுகாப்பு அலுவலகம், கரூர்.

2. திரு.பா.அருண்பாலகிருஷ்ணன்,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
(தேர்தல் பிரிவு)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர்.

1/3/23

நகல்

1) மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், கரூர்.
2) மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்), கரூர்.
3) தனிவட்டாட்சியர் (தேர்தல்), கரூர்.
4) 'அ3' இருக்கை இருப்பு கோப்பு.